பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

பனம் பொருள்கள்!
புழுக்கொடியல் மா, ஒடியல் மா
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
அண்ணா கோப்பிக்கடை
திருநெல்வேலி.

# உதயன்

விலை ரூபா 3-50

'ஜீவாகாரம்'
தற்போதைய சூழ்நிலைக்கேற்ப
'ஜீவாகாரம்'
பாலுடனோ அல்லது வாழைப்பழத்துடனோ பிசைந்து உண்ணக் கூடிய சத்துணவு
அண்ணா தொழிலகம்
இணுவில்.

சுடர் 5: பிரமோதூத ஸ்ரீ ஆடி மீ 09 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 02 (25 - 07 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 153

### முச்சந்தி முரளி



அப்பா... புதுப்பேர் சூட்டி புதுக்கதை விடப்போகினம் எண்டு சொல்லுங்கோ .....!

தொடர்ந்து படைகள் ஹெலிகள் மூலம் குவிப்பு

# பரந்தன் சண்டையில் 3,000 அரச துருப்புகள்!

## கிளிநொச்சியைப் பிடிக்க முயற்சி வழிமறித்து புலிகள் கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

ஆனையிறவு, பரந்தன் பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்று வரும் சண்டையில் - எண்ணிக்கை குறிப்பிடப்படாத விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்காக - அப்பகுதிகளில் 3,000 அரசாங்கத்துருப்புகள் குவிக்கப்பட்டிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

தொடர்ந்து ஹெலிக்கொப்டர்கள் மூலம் மேலும் துருப்புகள் குவிக்கப்பட்டு வருவதாக அந்தச் செய்திகள் தெரிவித்தன.

பரந்தனில் நிலைகொண்டுள்ள படையினர் கிளிநொச்சியை நோக்கி முன்னேறி அந்த நகரைக் கைப்பற்ற முயற்சிப்பதாகவும் — அந்தத் துருப்புகளை வழி மறித்து முன்னேற விடாது புலிகள் கடுமையாகத் தாக்கிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளினால் கடந்த 44 நாட்களாக முற்றுகையிடப்பட்டிருக்கும் கிளிநொச்சி முகாமை மீட்பதற்காகவே - ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி நோக்கி முன்னேறும் இராணுவ நடவடிக்கையை- ஸ்ரீலங்காப் படைகள் எடுத்திருப்பதாக சுயேட்சைச் செய்தி சேவைகள் தெரிவித்தன.

இதேவேளை - கிளிநொச்சிநகரைஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைப்பற்றி விட்டதாக ஊர்ஜிதம் செய்யப்படாத செய்திகள் தெரிவித்தன என்று இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது. [உ-9]

### குச்சவெளியில் பீரங்கி, ஷெல் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜூலை 25

நேற்று முன்தினம் குச்சவெளி இராணுவ முகாமிலிருந்தும், குச்சவெளி கடற்பகுதியில் தரித்து நின்ற பீரங்கிக் கப்பல்களிலிருந்தும் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-9)

### கோட்டையில் 2 சிப்பாய்கள் பலி

யாழ். கோட்டையில் காயமுற்ற சிப்பாய்கள் இருவர் மரணமானதாக பி.பி.ஸி நேற்றிரவு அறிவித்தது.

படையினருக்கு உணவு மற்றும் மருந்துகளுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் பி பி ஸி தெரிவித்தது. [உ]

இராணுவமும், பொலிஸும் கூட்டாக

### தமிழ் இளைஞர்களைத் தேடி புத்தளத்திலும் வேட்டை!

தமிழ் இளைஞர்களைத் தேடி புத்தளத்திலும் படையினர் வேட்டை நடத்தி வருகின்றார்கள்.

வீடு வீடாகச் செல்லும் இராணுவத்தினர் அண்மையில் வாடகை வீடுகளில் குடியேறிய வடபகுதி இளைஞர்களை விசாரணைக்காக அழைத்துச் செல்வதாகக் கூறப்படுகிறது.

புத்தளம் நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களும் சோதனை செய்யப்படுகின்றன. இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். (உ)

### வெடிவைத்த கல்லில் கைதான மூவரும் எங்கே?

யாழ்ப்பாணம், ஜூலை 25

வவுனியா, வெடிவைத்த கல் பகுதியில் வைத்து கடந்த வாரம் படையினரால் கைது செய்யப்பட்ட ஏழுபேரில் விடுதலையான நால்வரைத்தவிர மற்றவர்களின் நிலை மர்மமாக இருப்பதாகக் கவலை தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களில் இரு பெண்கள் உட்பட நால்வர் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

கண்கட்டிய நிலையில் கொண்டு செல்லப்பட்ட இராசன் [20 வயது] மணியம் [35 வயது], ஆகியோரும் மற்றொரு 13 வயதுச் சிறுவனும் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை அவர்கள் நிலை மர்மமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3-5]

## பாதுகாப்பு, ஏனைய தேவைகளை நாமே தேட உறுதி செய்வோம்

வெலிக்கடைப் படுகொலை நினைவு தின அறிக்கையில் புலிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

உணவுப் பொருள்கள் உட்பட எமது சகல தேவைகளையும், எமது பாதுகாப்பையும் நாமே தேடிக்கொள்வோம் என்ற உறுதியுடன் செயற்படுமாறு தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெலிக்கடைக் கொலைகள் நினைவு நாளை ஒட்டி விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளது.

வெலிக்கடை படுகொலையில் உயிர் நீத்த போராளிகளுக்கும் பொதுமக்களுக்கும் அறிக்கையில் வீர வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா அரசு தமிழ் பேசும் மக்கள் மீது மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் எல்லைமீறிக்கொண்டு

(3 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை- ஹபரணை வீதியில் 7 கண்ணிவெடிகள்!

படையினர் பாடு சிரமமாம்!!

யாழ்ப்பாணம், ஜூலை 25

கடந்த 24 மணி நேரத்தில் திருகோணமலை – ஹபரணை வீதியில் ரோந்து சென்ற படையினர் ஏழுக்கும் அதிகமான கண்ணிவெடித் தாக்குதல்களை சிரமத்துடன் எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

-பாதுகாப்பு அமைச்சு நேற்று மாலை விடுத்த அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தம்பலகமம் -பாலம்பட்டாறில் ரோந்து சென்ற படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் ஏழு படையினர் உயிரிழந்ததாகவும், மற்றொருவர் காய

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வல்லையில் ஹெலி சூடு!

வல்லைச்சந்தி ஊடாக பயணம் செய்தவர்கள்மீதுநேற்று பிற்பகல் 2 மணியளவில் இரு ஹெலிக் கொப்டர்கள் வேட்டுக்களைத் தீர்த்தன.

அவ்வழியாகச் சென்றவர்கள் தென்னந் தோப்புக்குள் ஓடி ஒழித்துத் தப்பிக்கொண்டனர். (ஓ)

## பரந்தன் பகுதியில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜூலை 25

பரந்தன் பகுதியில் தொடர்ந்து மோதல் இடம்பெற்று வருவதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

பரந்தன் சந்தியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று நண்பகல் ஒருமணியளவில் கிளிநொச்சிப் பகுதியை நோக்கி முன்னேற முயன்றதாகவும் –

அவர்களை முன்னேற விடாது விடுதலைப் புலிகள் கடுமையாகத் தாக்கிவருவதாகவும் –

மோதல் நேற்று மாலை வரை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்ததாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நேற்றுக்காலை 6 மணி முதல்பரந்தன் – கிளிநொச்சி பகுதிகளில் விமானக் குண்டு வீச்சும், ஹெலித்தாக்குதலும் இடம்பெற்றதாகவும் கூறப்பட்டது.

**முரசுமோட்டையில்**

இதேசமயம்–

முரசுமோட்டை 2 ஆம் கட்டையில் கடந்த திங்களன்று இடம்பெற்ற மோதல்களின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் மனோஜ். வெஸ்லி, சரவணன், ரேணு ஆகியோர்வீரமரணம் அடைந்ததாகவும்–

பின்னர் இராணுவம் பின்வாங்கும்போது அப்பகுதியில் மூன்று பொதுமக்களைச் சுட்டுக் கொன்றதாகவும் – விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

**பரந்தனில்**

திங்களன்று பரந்தனில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் காலை 8 மணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையிலிருந்து மா அடுத்த வாரமே இங்கு வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடபகுதிக்கான அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நாளை இங்கு வரும் கப்பல் அப்பொருள்களை இறக்கிய பின் திருமலை சென்று அங்கிருந்துகோதுமை மாவை ஏற்றிவரும்.

நாளைவரும் பொருள்கள் இங்கு இறக்கப்பட்டபின்னர் தற்போது இங்கு தங்கியிருக்கும் - வெளிநாட்டு பாஸ்போட் வைத்திருப்போரை ஏற்றிக்கொண்டு இக்கப்பல் திருமலைக்குச் செல்லும்.

அங்கு அவர்களை இறக்கிவிட்டு பிரிமா ஆலையிலிருந்து மாவை ஏற்றிக்கொண்டு அடுத்தவாரம் அக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்துசேரும்.

திருமலைக்குச் செல்லும் வெளிநாட்டுப் பாஸ்போட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 'கஜபாகு' நகரம் வவுனியாவுக்கு புதுப்பெயர்!

யாழ்ப்பாணம், ஜூலை 25

வவுனியா நகரம் ''கஜபாகு'' நகரமாக்கப் பட்டுள்ளது.

நகரத்தில் உள்ள பஸ் நிலையம் உட்பட முக்கிய இடங்களிலும், நகரை அண்டிய கிராமங்களிலும் தமிழில் ''கஜபாகு நகரம்'' என்று எழுதப்பட்டுள்ளதாக நேற்று அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். (உ-3-5)

## வவுனியா சிவில் நிர்வாகத்திற்கு சிங்கள அதிகாரிகள் நியமனம்?

யாழ்ப்பாணம், ஜூலை 25

வவுனியா அரச அலுவலகங்களுக்கு சிங்கள அதிகாரிகளை நியமித்து சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த இராணுவ-சிவில் கூட்டு உயர் மட்டத்தில் முயற்சி மேற்கொண்டுள்ளதாக அறிய வருகிறது.

இந்த மாற்றத்தின் பின்னர் சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான உயர் அதிகாரியும் ஒரு பெரும்பான்மை இனத்தவராகவே இருப்பார் எனத் தெரியவருகிறது.

இராணுவத்தைச் சேர்ந்த இணைப்பதிகாரி மேலதிக அரசாங்க அதிபராக அண்மையில் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை கடந்த திங்கட்கிழமை சகல கிராம சேவையாளர்களுக்கும் இணைப்பதிகாரி அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் தமிழ்க் கிராம சேவையாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வெளியூர், வெளிநாட்டு

### தபால்களை வெள்ளிக்கு முன் பெட்டிகளில் சேருங்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் கடிதங்களை அனுப்ப விரும்புவோர் அவற்றை நாளை மறுதினத்திற்கு [வெள்ளிக்கிழமை] முன்னதாக தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபால் அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சேகரிக்கப்படும்வெளியூர்,வெளிநாட்டுத் தபால்கள் அனைத்தும் பருத்தித்துறைக்கு உணவுப் பொருளை ஏற்றிவரும் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

பொதுமக்கள் தமது கடிதங்களை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தபால் பெட்டிகளில் சேர்த்தால் அவற்றைச் சேகரித்து கொழும்புக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

தற்பொழுது கொழும்புக்கு அனுப்பப்படுவதற்காக 50 பொதிகளில் தபால்கள் கட்டப்பட்டு யாழ். தபால் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

**சுபநேரம்**

25- 7- 90
புதன்கிழமை ஆடி 9
சுபநேரம்:
04-32— 06-02
இராகுகலம்
12-02—1-32

நாளை கப்பல் வருகிறது:

### பொருள் இறக்கும் வேலை உடனடியாக ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்' ஜூலை 25

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலை உடனடியாக ஆரம்பமாகும்.

கொழும்பில் இருந்து உணவுப்பொருள்களுடன் புறப்பட்ட கப்பல் நாளை பகல் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது

பொருள்கள் இறக்கப்பட்டு கரைக்கு கொண்டுவரப்படும் உடனேயே ப. நோ. கூ. சங்க லொறிகளில் அவை ஏற்றப்பட்டு ப. நோ. கூ. சங்கங்களுக்கு அனுப்பப்படும்.

இந்தக் கப்பலில் 200 தொன் அரிசியும்,100 தொன், மாவும், 90 தொன் சீனியும் 110 தொன் பருப்பு, தீப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பங்கீட்டு அடிப்படையில் உணவு கப்பல் வந்து சேர்ந்த பின்பே!

யாழ்ப்பாணம், ஜூலை 25

வாகன அணியில் வந்த உணவுப் பொருள்கள்போதாததால் கப்பல் வந்த பின்பே பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு அரிசி,மா, சீனி வழங்கப்படும்.

அரச அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

வாகன அணிமூலம்கொண்டு வரப்பட்ட மா பேக்கரிகளுக்கு பாண் உற்பத்தி செய்வதற்கு மட்டும் வழங்கப்படுகிறது சீனி, பால்மா 5 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிறது. (இ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

எல்லா வகையான இறைச்சிக் கோழிகள் உடன் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (13794)

### தவறிவிட்டது

கந்தசாமி விமலரட்ணம் என்ற பெயருடைய அடையாள அட்டையுடன் பேர்ஸ், பணம் ஆகியன ஆனைக்கோட்டைச் சந்திக்கும், ஆறுகால் மடத்திற்கும் இடையில் கைதவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். கந்தசாமி விமலட்ணம், (மெக்கானிக் தம்பி) 234/6, செபஸ்ரியன் லேன், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (13810)

## மேலும் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று மாங்குளம் பகுதியில் இராணுவத்தினருடன் நடந்த மோதலின்போது இராணுவத்தினர் கைவிட்டுச் சென்ற மேலும் சில ஆயுதங்களை தாங்கள் கைப்பற்றியதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏ. கே. மகஸீன்கள் - 6, ஐ. எம். ரக ரவைகள் - 90, 203 ரக ஷெல் - ஒன்று என்பனவே கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. அழகராசா ராஜன்

தமிழ் இன படைப்பு:
04 - 09 - 1963

சிங்கள இனவாத அழிப்பு:
25 - 07 - 1983

யாழ். செயலகத்தில் கடமைஆற்றிக் கொண்டு இருக்கும் பொழுது விசாரணைக்காக ஸ்ரீலங்கா கூலிப்படைகளால அழைத்துச்செல்லப்பட்டு வெலிக்கடைச் சிறையில் சிங்களக் காடைக் கைதிகளால கொடூரமான முறையில்வெட்டிக்கொல்லப்பட்ட துயர சம்பவத்தை எம் உயிர் இருக்கும் வரை மறவோம்,

உம்முடைய ஆத்மா சாந்தி அடைய நாம் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

தந்தை.
தாய்,
சகோதரர்,
சகோதரி.

11, குகன் வீதி,
அரியாலை.
[13797]

# அகதிமுகாம்கள் அமைப்பதில் ஒழுங்கு கடைப்பிடிக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 25

அகதிகள் முகாம்களைக் கண்ட இடத்தில் நிறுவுவது தவிர்க்கப்படவேண்டும். குறிப்பிட்ட சில இடங்களில்மட்டும் முகாம்களை நடத்த வேண்டும். இது தொடர்பான நடவடிக்கைகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் மேற்கொள்ளும்.

திங்களன்று நடந்த அரசசார்பற்ற நிறுவனங்களின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பல நிறுவனங்கள், பல்வேறு இடங்களில் முகாம்களை நடத்துவதனால் அகதிகள் பராமரிப்பைச் சிறப்பாக மேற்கொள்ள முடியாதுள்ளது. சில முகாம்களில் அகதிகள் நன்கு கவனிக்கப்படுகின்றனர். மற்றும் சில முகாம்களில் அகதிகள் ஒழுங்காகக் கவனிக்கப்படுவதில்லை — இவ்வாறு கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதே வேளை அகதிகளுக்கு ஜூன் மாதம் 25ஆம் திகதி வழங்கவேண்டிய 2ஆம் கட்ட உதவிகள் இன்னும் வழங்கப்படாதது பற்றியும் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

2ஆம் கட்ட நிவாரணத்திற்கான உணவுப் பொருள்களை வழங்க கூட்டுறவு சங்கத்திடமோ உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்திடமோ அந்தப் பொருடகள் இல்லை என்று அரச அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (உ-9)

## ஸ்தாபன இடமாற்றம்

எமது

ஆர்விஜி மெடிக்கல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

ஸ்தாபனத்தை தற்சமயம்

இல. 58, நல்லூர் குறுக்குத் தெருவிற்கு

இடமாற்றம் செய்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளருக்கும், ஆதரவாளர்களுக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

எம்மிடம் சகல வகையான மருந்துகளும், ஊசி மருந்துகளும், பால்மா உணவுகளும் பெற்றுக் கொள்ளலாம்.

[13812]

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சிவசுப்பிரமணியம் சிவநாதன்
(T. S. K. V. Brother's, கழுத்துறை)

மண்ணில்: 20 - 05 - 1954　　விண்ணில்: 25 - 07 - 1983

பாசத்தின் பிறப்பிடமே
பண்பின் உறைவிடமே
பால் மணம் மாறாத - உன்
திருமுகத்தைக் காணாது
பரிதவித்து நிற்கின்றோம்
சடுதியாய் உன் உயிர் பிரிந்ததுவே
இவ் வையகத்தில் தாம் மட்டும்
வாழ்வரென்று எண்ணினரோ
யார் வரினும் அன்புடன்
அன்னம் தான் இட்டீரே
அன்னமிட்ட கை காயுமுன்னே
உன்னைப் பறித்தனரே அநியாயமாய்
வாழத் தெரியாது தவிக்கின்றோம்
எம்மை எல்லாம் தவிக்கவிட்டு
எங்குதான் சென்றீரோ?
எம் இதயத்தின் அணையா ஒளிவிளக்கே!

உமது ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரங்கள்,
மைத்துனர்மார், உறவினர்.

வேலணை மேற்கு,
வேலணை - 8
(13813)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. தம்பு வல்லிபுரம்
(முன்னாள் முகாமையாளர் இலங்கைவங்கி பருத்தித்துறை)

தோற்றம்: 21 - 04 - 1936　　மறைவு: 17 - 07 - 1988

திதி: 25 — 07 — 1990

கண்ணை இமை காப்பது போல்
வண்ணமுறக் காத்து வந்தீர்
பாழும் விதியாலே எம்மைவிட்டு
பாதியிலே சென்று விட்டீர்
ஆண்டிரண்டு ஓடிவிட்டதாயினும்
ஆறவில்லை நம் சோகம்
நீங்கவில்லை எம் நெஞ்சைவிட்டு

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
— குடும்பத்தினர்

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
[13800]

## சாவகச்சேரியில்

சாவகச்சேரி, ஜூலை 25

சாவகச்சேரியில் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் 40 ரூபா வாக விற்பனையாகிறது.

கடைக்காரர்கள் பாவனையாளர்களுக்கு கால் போத்தல் வீதமே இதனை வழங்குகிறார்கள்.

தனியார் சிலர் ஒரு டசின் தீப்பெட்டி 25 ரூபாவாகவும் ஒரு தீப்பெட்டியை இரண்டு ரூபா 50 சதமாகவும் விற்கிறார்கள்.

(இ-31)

## யாழ். பல்கலைக்கழக மாணவர் பங்களிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வடமராட்சியை சேர்ந்த மாணவர்கள் உடுப்பிட்டி சந்தை, ஊறணி குடியேற்றத் திட்டப் பகுதிகளில் பெரிய அளவிலான பதுங்கு குழிகளை அமைத்துள்ளனர்.

அரியாலைப் பகுதியை சேர்ந்த பல்கலைக்கழக மாணவிகள் தமது பகுதி அகதி முகாம்களில் பூரண விவரங்களை சேகரித்து வருவதுடன் கிழக்கு அரியாலைப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு நிவாரணப் பொருள்களையும் வழங்கி உள்ளனர்.

(இ-மு)


## வட இலங்கை மருத்துவக் கல்லூரி
மூளாய்

மேற்படி கல்லூரியின் மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி (30 - 07 - 1990) கல்லூரிக்குச் சமுகம் தருமாறு வேண்டுகின்றோம்.

இயக்குனர்,
வட இலங்கை
மருத்துவக் கல்லூரி.

(13817)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
கந்தையா கைலாசபிள்ளை
(முன்னை நாள் உள்ளூராட்சி சபை, நிர்வாகச் செயலாளர்)
அவர்கள்

தோற்றம்: 11 - 07 - 1928　　மறைவு: 25 - 06 - 1990

அன்பும், பண்பும் கொண்ட எம் ஐயா!
ஆசையும் பாசமும் மிக எமை வளர்த்தீர்
இன்று நீ ரெமைவிட் டோர்திங்க ளாச்சே
ஈர்பத்து ஆண்டுகள் அன்னையை நீத்தநாம்
உம் அரவணைப்பில் ஊக்கமாய் வளர்ந்தோம்
ஊரவர் உறவினர் போற்றியே புகழ்ந்தனர்
எம்மைவிட் டகலநும் மனம்ஒருப் பட்டதோ?
ஏகமில் 'கந்தா' 'குட்டி' என் றழைத்தோம்
ஐயோ! நின் உருத்திரற்கு என்ன பதில் சொல்வோம்
ஒன்றுமறி யாதமகள் நந்தாவும் நைந்திடுவாள்
ஓலமிட்டே நாங்களிங்கு ஓவென் றலறுகின்றோம்
ஔவித்தல் இல்லாத ஐயா நீர் சென்றதனால்
அஃதைகளாய் வாழ்கின்றோம் ஆண்டவா ஆளுவையே!

நின் பிரிவால் ஆறாத்துயரில் நீறாகும் பிள்ளைகள்:
சூரியகலா, நந்தினி (பிரான்ஸ்),
உருத்திரன் (ஜேர்மனி), நகுலினி.

''சாவித்திரி வாசா''
ஆனைக்கோட்டை வடக்கு,
[illegible]
(13803)

## இடமாற்றம்

ரதி வோச் வேக்ஸ் & ஸ்ரோர்ஸ்

44, 46, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைகளுக்காகத் தந்த மணிக்கூடுகள், T. V, றேடியோ ஆகியவற்றை 2 மணிக்குப் பின் கீழ் வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

சேகர் நடராசா
''இந்துமதி''
12, பொன்னையா லேன்,
(உபதபால் அலுவலகத்திற்கு அருகில்)
ஆனைக்கோட்டை.

[13802]

## M THREE TRAVELS

சிங்கள ஏகாதிபத்திய அரசுக்கெதிராக போரிட்டு வீரமரணம் அடைந்த வேங்கைகளிற்கு

எமது வீர அஞ்சலி

இப்போரில் காயமடைந்த வீர வேங்கைகள் விரைவில் சுகமடையவும், வெற்றி பெறவும் பிரார்த்திக்கின்றோம்.

M THREE TRAVELS தாபனத்தினர் இவர்களை உடனடியாக கீழ்க் காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறார்கள்.

1. சங்கரநாதன் சிவராஜா (விக்கி)
2. கணபதி செல்லத்துரை (அளவெட்டி)
3. அப்புத்துரை சத்தியகுமார் (கலட்டி)
4. ராசன் முத்துராஜா (பளை, வீமன்காமம்)
5. அருளானந்தம் திலீப்குமார் (யாழ்ப்பாணம்)
6. கந்தசாமி குமாரதேவன் (தெல்லிப்பழை)
7. தம்பிமுத்து தங்கராஜா (துணுக்காய்)
8. மார்க்கண்டு நேசகுமார் (தெல்லிப்பழை)

## M Three Travels

20, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி வடக்கு.
[விங் கொம்பனிஅருகாமை]

[சி-5282]

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



சி. பாலசிங்கம் கமலா (பிள்ளை)

மண்ணில்: 25 - 05 - 1969　　விண்ணில்: 15 - 05 - 1990

சிரிக்க வைத்த சித்திரமே இன்று - நாம்
சிலையாய் மாறி கண்ணீர்
சிந்தியழ எம்மை விட்டு - ஏன்
சிறகடித்துப் பறந்தாயோ
உன் மிளிர் தீபம் கண்டு - கமலா
உன் புன்சிரிப்போடு இணைந்து
பூத்து நிற்கும் மலர்களுக்கு - ஏன்
பதில் சொல்லாமல் சென்றாயே
இறைவனது திருவடியில் - நீ
மழலையாகி விட்ட பூ - இதழே
குலவிளக்காய் எம்முடனே - நீ
தினம் தினம் எம் மனதில் குடியிருப்பாய்

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்
தந்தை, தாய், சகோதரர்கள்,
மற்றும் உறவினர்கள்.

பத்துப்பனையடி,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
[13816]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### 7 வருடங்களில்....

இன்று ஜூலை 25 ஆம் திகதி. 1983 ஜூலை 25 - வந்து ஏழாவது வருடம் பூர்த்தி அடையும் நாள்.

அந்த வருடம் அதே மாதம் 23 ஆம் திகதி திருநெல்வேலியில் வைத்து பதின்மூன்று இராணுவத்தினர் கண்ணி வெடித் தாக்குதலில் இறந்ததைத் தொடர்ந்து, தென்னிலங்கை எங்கும் தமிழர் பெரிய அளவில் இனப்படுகொலை செய்யப்பட்ட நாள் ஜூலை 25. அதன் பின் நடந்த சம்பவங்கள் இலங்கையின் 'கறுப்பு ஜூலை' என்று உலகின் தற்காலச் சரித்திரத்தில் எழுதப்பட்டன.

அதே 'கறுப்பு' ஜூலைதான் தமிழர் சரித்திரத்திலும் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. தாம் உரிமை பெற்ற சுதந்திர மக்களாக வாழ வேண்டும் என்ற உணர்வை, உணர்ச்சியை, உத்வேகத்தை தமிழர் மத்தியில் மிகப் பரந்த அளவில், முழு அளவில், விதைத்ததும் 'கறுப்பு ஜூலை'தான்.

1983 ஜூலை 25 தொடக்கம் 1990 ஜூலை 25 வரையான ஏழு வருடங்களில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் பல்வேறு வடிவங்களையும், கட்டங்களையும் கண்டது. தமிழர்கள் பலவிதமான சோதனைகளையும், வேதனைகளையும் அனுபவிக்க நேர்ந்தது. விலை மதிக்க முடியாத அளவுக்கு, காலத்துக்குக் காலம் உயிர்களையும், உடைமைகளையும் இழக்க வேண்டியதாயிற்று. இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாகவும், ஆதரவற்றவர்களாகவும், அனாதைகளாகவும், அங்கவீனர்களாகவும், அல்லற்பட்டு அவதியுற நேர்ந்தது.

ஈழத்தமிழர் வாழ்க்கையில் கடந்த ஏழு வருடங்களாக துன்பத்தின் வெவ்வேறு வடிவங்கள் சக்கரமாகச் சுழன்று வருகின்றன.

அந்தச் சுழற்சியின் ஒரு வட்டம், ஒரு கட்டம் கடந்த ஒன்றரை மாதங்களாக-சரியாக 44 நாட்களாக-மீண்டு வந்திருக்கிறது. இப்போதைய நிகழ்வுகள், பாதிப்புகள், விளைவுகளை இப்பத்தியில் நாளாந்தம் எழுதிவருகிறோம் அவற்றை இவ்வேளை மீட்டுரைப்பது பொருத்தமன்று.

கடந்த ஏழு வருடங்களிலும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் கண்ட வளர்ச்சி, தாண்டவேண்டி இருந்த தடைகள், முட்டுக்கட்டைகள், அதனைத் திசைமாற்ற எடுக்கப்பட்ட முயற்சிகள், தங்குமடம் போடுவதற்கு கையாளப்பட்ட தந்திரங்கள் என்பனவும் நீட்டோலையில் கொள்ளத்தக்கவை.

இராணுவத் தீர்வு, அரசியல் தீர்வு என்ற இரண்டும் பல தடவைகள் மாறி மாறிக் கையாளப்பட்ட போதிலும், இலங்கை அரசாங்கம் தமிழர்களின் உரிமைகளில் அடிப்படையான எதையும் வழங்கவில்லை ஒரு தேசிய இனம் என்ற வகையில், தமிழர்கள் அனுபவிக்க அருகதை உடைய ஆகக் குறைந்த அடிமட்ட உரிமையான சுயநிர்ணய உரிமைபற்றி சிங்கள அரசுகள் பேச்சுக்குத் தானும் தொடவில்லை.

கடந்த ஏழு வருடங்களில் தமிழர்களின் கைக்கு பூரணத்துவமான, பயன்விளைவிக்கவல்ல உரிமை எதுவுமே வந்து கிட்டவில்லை. எனினும் உரிமைப் போராட்டத்தைத் தொடரவேண்டும் என்ற உணர்வு தமிழர்கள் மத்தியில் பெருவிருட்சமாக வளர்ந்து வருவதை உலகமே எடைபோட்டுள்ளது. அதனை நாளும், முயற்சி, பின்வாங்காமை (மனஉறுதி) ஆகிய தண்ணீரும், பசளையும் இட்டுக்காப்பாற்றினால், உரிமைக் கனி, இப்போது இல்லாவிடினும், ஒரு நாள் பழுத்துக் கைக்கு வரும் இன்றைய தினத்தில் தமிழர்கள் அதனை மனதில் இருத்துவது அவசியம்.

ஆகஸ்ட் முதலாம் திகதிமுதல்

# திருமலை அரச ஊழியரை வேலைக்கு வரப் பணிப்பு

## பாடசாலைகளும் ஆரம்பமாகுமாம்

கொழும்பு, ஜூலை 25

திருகோணமலை மாவட்டத்தில் சகஜ நிலைக்குத் திரும்பியுள்ள எட்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள அரச ஊழியர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி கடமைக்குத் திரும்ப வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்பிரிவுகளில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் ஆகஸ்ட் முதலாம் திகதி திறக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி நேற்று முன்தினம் திருமலையில் நடத்திய மாநாட்டில் வைத்து இந்த உத்தரவுகள் வெளியிடப்பட்டன.

திருமலை மாவட்டத்தில் 11 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உள்ளன.

எஞ்சிய மூன்று உதவி அரச அதிபர் பிரிவுகள் இன்னும் பாதுகாப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## தேசிய கல்வி ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 25

தேசியக்கல்வி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இது சம்பந்தமாக அமைச்சர் லலித் அத்துலத்முதலி செய்த சிபார்சை அமைச்சரவை கடந்த புதன்கிழமை ஏற்றுக்கொண்டது.

கல்வி சம்பந்தமாக தேசியக் கொள்கை ஒன்றை வகுப்பது, அதனை அமுல் நடத்துவது போன்றவற்றை இந்த ஆணைக்குழு கவனிக்கும் என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார்.

(இ-எ)

## ஆசிரியருக்கும் காப்புறுதி

கொழும்பு, ஜூலை 25

பாடசாலை ஆசிரியர்களையும் காப்புறுதி செய்யும் விசேட திட்டம் ஒன்றை இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனம் தயாரித்து உள்ளது.

விரைவில் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மாணவரைக் காப்புறுதி செய்யும் திட்டம் ஒன்றை இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ளது தெரிந்ததே!.

[இ-எ]

## வேலணைப் பகுதியில் அகதிகள்: 9,530 பேர்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1. 333 குடும்பங்களைச் சேர்ந்த 6, 306 பேருக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாக வேலணை உதவி அரச அதிபர் திரு. என். தனபாலசிங்கம் அறிவித்துள்ளார்.

வேலணை உதவி அரச அதிபர் பிரிவில் மொத்தம் 1,961 குடும்பங்களைச் சேர்ந்த 9, 530 பேர் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களுக்கென அங்கு எட்டு அகதி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நிவாரணப் பொருள்கள் கிடைக்காத ஏனையோருக்கு நிவாரணப் பொருள்களை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையில் வேலணை உதவி அரச அதிபர் தற்போது ஈடுபட்டுள்ளார். (அ-10)

## தபால் ஊழியரின் சம்பளம் தாமதமாகலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

அஞ்சல் திணைக்கள யாழ். பிரதேச கணக்காளர் அலுவலகத்தில் இருந்து சம்பளம் பெறும் சகல தபால் அலுவலகங்களுக்கும். ஜூலை மாதக் கொடுப்பனவு தாமதமாகலாம் என்று பிரதேச கணக்காளர் திருமதி என். பாலேசன் தெரிவித்தார்.

ஜூலை மாதக் கொடுப்பனவுக்குத் தேவையான கட்டு நிதி கொழும்பில் இருந்து இன்னும் தபாலில் வரவில்லை என்றும் இப்பணம் கிடைத்தாலே கொடுப்பனவைச் செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தபால் ஊழியர்களுக்கான காசோலைகள் யாவும் தயார் நிலையில் உள்ளன. என்றும் ஆனால் கட்டு நிதி (இம்பிறஸ்ட்) வந்ததுமே கொடுப்பனவு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

சம்பளக் கொடுப்பனவு வேலைகள் மாத்திரம் மானிப்பாய் றியல் இன்ஸ்ரிரியூட்டில் உள்ள தற்காலிக வாசஸ்தலத்தில் நடைபெறுகின்றன [இ]

## அரச ஊழியரும் சேரலாம்

கொழும்பு, ஜூலை 25

அரசாங்க ஊழியரும் விரும்பினால் ஊழியர் நம்பிக்கை நிதித்திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம் என்று அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டு உள்ளது. (இ-எ)

## ஆடிப்பூரம்

தொல்புரம், ஜூலை 25

தொல்புரம் மத்தி கொட்டடிப் பதி அருள்மிகு ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் ஆடிப்பூரத் திருவிழா இன்று புதன்கிழமை மாலை நடைபெறுகிறது.

[இ-30]

## திருமலையில் பச்சை நிற கார்ட்

யாழ்ப்பாணம், ஜூலை 25

திருகோணமலை நகருக்குள் புதிதாகச் செல்பவர்கள் இராணுவ முகாம்களில் தமது பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

இதேவேளை அங்கு நிரந்தரமாக தற்பொழுது வசித்து வருபவர்களுக்கு இராணுவத்தினர் பச்சை நிறக் கார்ட் ஒன்றையும் வழங்கியுள்ளனர்.

இராணுவத்தினர் வீடுகளுக்குச் சோதனைக்கு வரும் பொழுது இந்தப் பச்சை நிறக் கார்ட்டை அவர்கள் காட்டவேண்டும். (இ-10)

## காசோலைகள் திரும்புகின்றன

ஆசிரியர்களுக்கு காசோலையாக வழங்கப்பட்ட சம்பள முற்பணம் ரூபா ஆயிரத்துக்கான நிதி இதுவரை மானிப்பாய் இலங்கை வங்கியிலுள்ள கல்வித் திணைக்களத்தின் கணக்கிற்கு வந்து சேரவில்லை.

வங்கி சம்பள முற்பணத்துக்கான காசோலைகளைத் திருப்புகிறது. இதனால் தனியாரிடம் இக்காசோலைகளை காசாக்கிய ஆசிரியர்கள் பல சிரமங்களுக்கும், அவமானத்துக்கும் ஆளாக வேண்டியுள்ளது. (மு-120)

# நிலஅளவை பகுதி அலுவலர் இருவர் அம்பாறையில் கொலையுண்டனரா?

## இடம்பெயர்ந்த ஊழியர் கஷ்டநிலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 25

'கடந்த ஒன்றரை மாத காலம் வெளித்தொடர்புகள் இன்றித் துண்டிக்கப்பட்ட நிலையில் வாழும் யாழ்-மாவட்ட மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர். அதேநேரம் நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த 300க்கும் அதிகமான ஊழியர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து தமது கஷ்டங்களை, கருத்துக்களை, உணர்வுகளை வெளிப்படுத்தும் உரிமைகூட இல்லாத நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். அம்பாறையில் இருவர் கொலையுண்டும் உள்ளனர்.

மேற்கண்டவாறு கூறும் கடிதம் ஒன்றை அரச நில அளவையாளர் சங்கத்தின் உதவிச் செயலாளர் திரு. கே. சண்முகலிங்கம் கொழும்பில் உள்ள தாய்ச்சங்கத்துக்கு அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜூன் 18 ஆம் திகதியில் இருந்து யாழ்ப்பாண நில அளவை பிராந்திய அலுவலகம் மூடப்பட்டுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள சகல உத்தியோகத்தர்களும் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் அனைவருக்கும் ஜூன், ஜூலை மாதச் சம்பளம் வழங்குவதற்கு தேவையான பணத்தை உடனடியாக அனுப்பும்படி வேண்டுகிறோம்.

இடம்பெயர்ந்த மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்ட ஊழியர்களுக்கும் ஜூன், ஜூலை மாதச் சம்பளத்தை அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் மூலம் வழங்கலாம்.

### இருவர் கொலை; காணவில்லை

திருகோணமலையில் தங்கி உள்ள வடக்கு - கிழக்கு மாகாண நில அளவை பிரதிமா அதிபர், திருகோணமலை நில அளவை அத்தியட்சகர், கிளிநொச்சி நில அளவையாளர் திரு. எஸ். தில்லைநாதன் ஆகியோர் பற்றிய தகவல் எதுவும் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை.

அம்பாறை மாவட்ட நில அளவைத் திணைக்களத்தைச் சேர்ந்த டி. ஒ. ஏ விநாயகமூர்த்தி நில அளவையாளர் யோகலிங்கம் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளார்கள். என அறிகிறோம்.

ஜூலை மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் யாழ் பிராந்திய நில அளவை திணைக்களம் குண்டுவீச்சினால் கடுமையாக சேதமடைந்ததுடன் பெறுமதி வாய்ந்த நில அளவை ஆவணங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

தற்போது யாழ் - மாநகர எல்லைக்குள் தனியார் கட்டடம் ஒன்றிற்கு அது தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில அளவை மா அதிபர் திரு. எஸ். டி. ஹேரத்துக்கு இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது. (இ-3-5)

## பருத்தித்துறைப் பகுதியில் கடற்பீரங்கி வேட்டுக்கள்

பருத்தித்துறை, ஜூலை 25

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய கரையோரப் பகுதிகளில் பல நாட்களின் பின்னர் கடந்த வார இறுதியில் கடற்படையின் பீரங்கிப் படகுகள் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளை நோக்கி பீரங்கி வேட்டுகளைத் தீர்த்தன.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணியளவில் பருத்தித்துறை முனைப் பகுதியை நோக்கி பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இவற்றில் ஒரு வேட்டு மருதடி தற்காலிக மரக்கறிச் சந்தைக்கு அருகாமையில் காலை 9 மணியளவில் விழுந்து வெடித்தது. மற்றும் முனைப்பகுதி, வல்லிபுரம் புனிதநகரப் பகுதி, சவனாய், சாரையடி, கற்கோவளம் ஆகிய பகுதிகளிலும் கடற்படையினரின் பீரங்கி வேட்டுக்கள் வந்து விழுந்த வண்ணம் இருக்கின்றன.

பீரங்கி வேட்டு தீர்க்கப்பட்டதால், பருத்தித்துறை, மருதடி தற்காலிக சந்தை ஞாயிறன்று இயங்கவில்லை. இச்சந்தையில் வியாபாரம் செய்பவர்களில் சிலர் கிராமக்கோட்டடிச் சந்தைக்கு தமது பொருள்களை எடுத்துச் சென்று சந்தைப்படுத்தினர். கரையோரப் பகுதியில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். (அ-118)

## வந்த தபால்களில் அதிகம் வெளிநாட்டு சஞ்சிகைகளே!

யாழ்ப்பாணம், ஜூலை 25

மதவாச்சியில் இருந்து செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகன அணி மூலம் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்ட தபால் பொதிகளில் ஏராளமானவை வெளிநாட்டு சஞ்சிகைகள் என்றே தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதங்கள் மிகக் குறைவாகவே அனுப்பி வைக்கப்பட்டதாகவும் —

தபால் பொதிகள் பல உடைக்கப்பட்டிருந்ததாகவும் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

70 தபால் பொதிகள் கொண்டு வரப்பட்டதாகவும், கடந்த இரண்டு நாட்களில் இவை உரிய விலாசங்களில் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். [உ-10]

## ரூ. 1 கோடி நஷ்டம்

சமீபத்திய அசம்பாவிதங்களினால் யாழ். மாநகர சபைக்கு சுமார் 1 கோடி ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-9)

## சிங் - கோர்பச்சேவ் பேச்சு

மாஸ்கோ, ஜூலை 25

இந்தியப் பிரதமர் வி.பி. சிங் மாஸ்கோவில் ஜனாதிபதி கோர்பச்சேவுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

மாஸ்கோ விமான நிலையத்தில் திரு. சிங்கை சோவியத் பிரதமர் ரிஷ்கோவ் வரவேற்றார். (இ-எ)

# கொழும்பு புறப்பட்ட யாழ். பயணிகளுக்கு நடுவழியில் ஏற்பட்ட கசப்பான அனுபவம்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதற்கு ஒரு பஸ்ஸுக்கும் 26 பயணிகளுக்கும் மட்டும் அனுமதிப்பத்திரம் பெற்ற பஸ் உரிமையாளர், இரு பஸ்களில் 108 பேரை ஏற்றிக் கொண்டு புறப்பட்டார். அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட 26 பயணிகளும் பத்திரமாகக் கொழும்பு சென்று விட்டனர் ஏனைய பயணிகளுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தைபயணி ஒருவரே தெரிவிக்கிறார். படித்துப் பாருங்கள்

யாழ். நகரிலுள்ள ஓர் இயந்திரப் பொறியியல் நிறுவனத்தில் பெயர்களைப்பதிவு செய்து கடந்த 16 ஆம் திகதி 2 பஸ்களில் கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம்.

கொழும்பிலுள்ள அரச செல்வாக்குப்பெற்ற அதிகாரி ஒருவரின் குடும்பத்தவர்கள் 26 பேரை கொழும்பு கொண்டு செல்வதற்காக அந்த பஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

ஒரு பஸ்ஸில் அந்தப்பயணிகள் 26 பேரும் பயணம் செய்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த பஸ் உரிமையாளர் ஒரு பஸ்ஸுக்குப் பதிலாக இரண்டு பஸ்களை கொழும்புக்குக் கொண்டு செல்லத் திட்டமிட்டார். அதன்படி பிரஸ்தாப இயந்திர பொறியியல் நிறுவனத்தில் பெயர்ப்பதிவும் இடம் பெற்றது.

இறுதியாக 16 ஆம் திகதி இரண்டு பஸ்களும் புறப்பட்டன. ஆனால் ஒரு பஸ்ஸுக்கும். 26 பயணிகளுக்கும் மட்டுமே அனுமதிப்பத்திரம் இருந்தது.

பஸ்கள் மடுவை அடைந்த போது பஸ் உரிமையாளர்கள் இரண்டாவதாகச்சென்ற பஸ் பழுதடைந்து விட்டது என கூறி அனைவரையும் அனுமதிப் பத்திரம் உள்ள பஸ்ஸில் திணித்தனர்.

### யக்காவ முகாமில்

சுமார் 108க்கு மேற்பட்ட பயணிகளுடன் அந்த பஸ் யக்காவ இராணுவமுகாமை அடைந்தது. அங்கு அனுமதிப் பத்திரத்தைப் பார்த்த இராணுவத்தினர் 26 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும் என்று கூறிவிட்டனர்.

இதனை அடுத்து 26 பயணிகள் தவிர அனைவரும் யக்காவையில் இறக்கப்[illegible] அவர்களை இ[illegible] அந்த 26 பேருடனும் பஸ் புறப்பட்டுச் சென்றுவிட்டது.

யக்காவையில் இருந்து நாம் 5 மைல் தூரம் நடந்து அகன்பின்டிராக்டர்ஒன்றில் ஏறிவவுனியாவை அடைந்தோம். வவுனியா நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. ஆயினும் கடைகள், வீடுகள் என்பவற்றை திறந்து மக்கள் சில பொருள்களை எடுத்துக் கொண்டிருந்தனர் இராணுவத்தினர் அதிகமாகக்காணப்பட்டனர்.

### சன நடமாட்டம்

நகரிலிருந்து சுமார் அரை மைல் தொலைவில் வழமையான சனநடமாட்டத்தைக் காணக்கூடியதாக இருந்தது இராணுவ நடமாட்டம் காணப்படவில்லை மா, சீனி பெற்றோல்போன்ற பொருட்களை முஸ்லிம் வியாபாரிகள் விற்றுக்கொண்டிருந்தனர்.

நாம் வவுனியா கந்தோரிக்க ஆலயத்துக்குச் சென்று அங்கிருந்து இராணுவ பாதுகாப்புடன மதவாச்சியை அடைந்தோம். அங்கிருந்து ரயில் மூலம் 18 ஆம் திகதி கொழும்பை அடைந்தோம்.

நாம் கொழும்பு சென்ற போது அங்கு பலரும் எம்மைச் சூழ்ந்து கொண்டு இங் [illegible] [illegible]த்தனர். யாழ்ப்பாணத்தில் விமானத் தாக்குதல்களால் பலர் இறந்ததாகவும், இராணுவம்பலமைல்கள்தூரம் முன்னேறி விட்டதாகவும் கொழும்பில் வெளியான செய்திகளால் தாம் பீதி அடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மதவாச்சி வரும் யாழ்தேவி ரயில் தினமும் குறைந்த அளவு பயணிகளுடனே யே வந்து திரும்புகின்றது.

கொழும்பில் பல லொஜ்களிலும், மண்டபங்களிலும்இந்து ஆலயங்களிலும் வடக்கு-கிழக்குக்குசெல்ல முடியாமல மக்கள் தங்கிநிற்கின்றனர். அவர்களுக்கு அரசாங்கம் காலையிலும், மாலையிலும் பாணும், நண்பகலில் சோறும் வழங்குகிறது. வாகனஅணி ஒன்றை செஞ்சிலுவைச்சங்கம் ஏற்பாடு செய்து தம்மை வீடுகளுக்கு அனுப்பி வைக்கும் என அவர்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

கொழும்பில் கைது செய்யப்பட்ட ஒரு சிலரைத் தவிர ஏனைய அனைவரும் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

ஆங்காங்கே படையினர் பணம் பறிக்கும் நோக்குடன் சில இளைஞர்களை கைது செய்கின்றனர். ஆயினும் பணம் கொடுத்தால் உடனேயே விட்டுவிடுகின்றனர். இப்படி அவர் தெரிவித்தார். [இ-9]

## பாதுகாப்பு ஏனைய.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போகின்றன. சிங்கள இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் குடியிருப்புகளுக்குள் புகுந்து அப்பாவித் தமிழ் மக்களை வெட்டியும் சுட்டும் கொன்று குவிக்கின்றனர்; தாக்கித் துன்புறுத்துகின்றனர் அகதிகளாக இடம் பெயர்ந்த மக்களை விரட்டித் தாக்குகின்றனர்.

தாக்குதல்களில் குந்து தப்புவதற்காக அகதிகளாக இந்தியாவிற்குத் தப்பிவிட முயலும் தமிழ் மக்கள் கடலில் வைத்து சுட்டுக்கொல்லப்படுகின்றனர் காயமடைந்த மக்களுக்கு மருந்தோ, மருத்துவ வசதிகளோ துளி அளவும் கிடையாது. உணவுப்பொருள்கள், எரிபொருள்கள், மின்சாரம் உட்பட எந்தப் பொருள்களும் கிடைக்காமல் மக்கள் அவதியுறுகின்றனர்.

### ஒப்பாரியால் பயனில்லை

சிறிலங்கா அரசு உணவு தரவில்லை: மருந்து தரவில்லை என்பதையிட்டு தமிழ் மக்கள் ஒப்பாரிவைத்துப்பயனில்லை. சிறிலங்கா அரசு தமிழ் மக்களை எதிரிகளாகக் கருதி அழித்தொழிக்கும் வகையில் செயற்பட்டு வருகிறது. உணவு முதற்கொண்டு உடுபுடைவை வரை எமது அனைத்துத் தேவைகளையும் நாமே நிறைவு செய்துகொள்ள தயாராக வேண்டும் எமது பாதுகாப்பை நாமே தேடிக் கொள்ள வேண்டும்.

சிறிலங்கா அரசு தற்போது தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்கள் எங்கணுமே தாக்குதல் நடத்திவருகிறது. உணவுப் பொருள் களஞ்சியங்கள், மருத்துவமனைகள், கடைகள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் என்று எவற்றையுமே இயங்கவிடாது அழித்துவருகிறது.

### வெலிக்கடைச் சம்பவம்

உலகில் எங்குமே நடைபெறாத வகையில் வெலிக்கடைச் சிறையில் தண்டனைக் கைதிகளாகவும், விசாரணைக் கைதிகளாகவும் இருந்த 53 போராளிகளையும், பொதுமக்களையும் சிங்கள இனவாதப் படையினரும், குண்டர்களுமாகச் சேர்ந்து 1983 ஜூலை 25, 27 ஆம் திகதிகளில் கோரமாகக் கொன்று குவித்து 7 ஆண்டுகள் மறைந்துவிட்டன.

இனவெறிப் படையினரின் அந்தக் கோரத் தாக்குதல்களை எதிர்கொண்டு வெலிக்கடைச் சிறையில் தங்கள் இன்னுயிரை ஈந்த விடுதலைப் போராட்ட முன்னோடிகளான தங்கத்துரை, குட்டிமணி மற்றும் எமது இயக்கத்தின் தூண்களாகச் செயற்பட்ட தாமு கந்தையா (புத்தூர்), சிவானந்தராசா (மூதூர்), சதீஸ்வரன் (அச்சுவேலி) உட்பட அனைவருக்கும் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் எமது தேவைகளையும் பாதுகாப்பையும் நாமே தேடிக்கொள்வோம் என்ற உறுதியுடன் செயற்படுமாறு தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் வேண்டுகிறோம் — என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

* தரமான வர்ண நிழற்படபிரதி ஒன்று 3R/PC - 6/30, 5/90, 5/50
* விநியோகம் ஒரு வாரம் [7 Days]
* விற்பனை - வர்ண நிழற்படச் சுருள்கள்

பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

உதயன்

25 - 7 - 1990 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்பட பிரதிகள், பிரதியாக்கம் செய்பவர்களுக்கு பட அல்பங்கள், படச்சுருள்கள் இலவசமாக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு:

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

111, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்.,

### கிளிநொச்சி, பரந்தனில் இருந்து

## தென்மராட்சிக்கு வந்த அகதிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை, 25

கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி வந்துள்ள அகதிகளுக்கு ஒரு வார உணவு நிவாரணம் வழங்குமாறு அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பணிப்புரை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி, பரந்தன் ஆகிய பகுதிகளில் இருந்து நேற்று முன்தினம் காலை முதல் ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயரத் தொடங்கினர்.

இடம்பெயர்ந்து வந்தவர்களில் அனேகர் தென்மராட்சியில் பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்று சாவகச்சேரி, கச்சாய் பகுதிகளில் தங்கியுள்ள இந்த அகதிகளை நேரில் பார்வையிட்டார். (ஓ-3 5)

## இலங்கைக்கு கப்பல் அனுப்ப திராவிடர் கழகம் வேண்டுதல்

சென்னை, ஜூலை 25

தமிழகம் வருவதற்காக இலங்கையில் காத்து இருக்கும் தமிழ் அகதிகளை ஏற்றி வருவதற்காக இந்திய மத்திய அரசு கப்பல்களை அனுப்பி வைக்க வேண்டும்.

திராவிடர் கழக இளைஞர் மாநாட்டில் முன்கண்டவாறு கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

சென்னையில் கடந்த திங்கள் நடந்த இந்த மாநாட்டில் —

இலங்கைத் தமிழர் பிரச்சினையை அந்த நாட்டின் உள் விவகாரமாகக் கருதக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டது. (இ-எ)

## ஜீ. சி. ஈ. மாணவர் கூட்டம் இன்று காலை நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

ஜீ. சி. ஈ. (உயர்தர) மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்றை இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கத்தில் தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் நடத்துகின்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி ஜீ. சி. ஈ. (உயர்தர) வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் ஒன்றியம் அழைப்பு விடுத்திருக்கிறது.

கல்வித்துறைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகளைக் கண்டித்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மரண அறிவித்தல்கள்

### மருதப்பு நட்சேத்திரம்

வட்டு கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் அராலி கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய மருதப்பு நட்சேத்திரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) 23-07-90 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வரலட்சுமி அம்மாவினதும், தங்கேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், சிவநாயகி, நிமலராணி, கந்தவேல் (பிரான்ஸ்), சரவணபவானந்தன் (பிரான்ஸ்), கோகிலா (பிரான்ஸ்), ஆதிரைதேவி, சிறிபாலன், சிவபாலன், குகபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குலசிலநாதன், கருணாகரன், செல்வரட்ணம், சிலநிதி, அருட்ஜோதி, ஆகியோரின் மாமனாரும், கோகிலாவாணி, செந்தூர்நாதன், கண்ணன், கணேஸ், தனு, யசிந்திகா, மயூரதன், ஷோபனியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

ஈமக்கிரியை அராலி கிழக்கில் 23-07-90 இல் நடைபெற்றது. இத் தகவலை நண்பர்கள் உறவினர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்

தகவல்:

அ. பாலசிங்கநாயகம்

அராலி. [13808]

### கந்தையா சிவபாக்கியம்

அராலி வடக்கு செட்டியார் மடத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா சிவபாக்கியம் காலமானார். இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மயிலுப்பிள்ளை கந்தையா (முன்னால் இ. மி. ச. லிகிதர்)வின் அன்பு மனைவியும், இந்திராதேவி, சுலோச்சனாதேவி, சாந்தினிதேவி (யாழ். பல்கலைக்கழகம் லிகிதர்) ஆகியோரின் அருமைத் தாயாரும், மகேந்திரராஜா, செல்வராஜா, சத்தியானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுகிஸ்வரன், சதீஸ்வரன், பாமினி, தர்ஷனி ஆகியோரின் பேத்தியாரும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை மதியம் 12 மணியளவில் வட்டுக்கோட்டையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ச. சத்தியானந்தன்.

வட்டுக்கோட்டை. (13820)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி. 292/2 லக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### சென்னையில் ஊர்வலம்

சென்னை, ஜூலை 25

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் அரசப் படையினரால் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து திராவிடர் கழக இளைஞர் அணித் தொண்டர்கள் கடந்த திங்கட்கிழமை சென்னையில் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். (இ-எ)

### கவலை தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

இலங்கை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடந்து வரும் சண்டை காரணமாக மோசமடைந்து வரும் நிலைமை குறித்து ஐரோப்பியபொருளாதார சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

கவலையைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை இந்த ஸ்தாபனத்தின் பிரதிநிதி ஒருவர் இலங்கை அரசிடம் ஒப்படைத்தார். (உ-எ)

### வள்ளங்கள் தீப்பிடித்தன!

பருத்தித்துறை, ஜூலை 25

பருத்தித்துறை, முனை, பொலிகண்டி ஆகிய கரையோரப் பகுதிகளை நோக்கிக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடற்படையினர் நடத்திய பீரங்கித் தாக்குதலில் அங்கு நிறுத்தப்பட்டிருந்த வள்ளங்கள் பல சேதமுற்றன. சில தீப்பிடித்து எரிந்து நாசமாகின. (ஓ-118)

### அகதிகளில் சிலர் வெளியேற்றம்

குருநகர், ஜூலை 25

யாழ், பற்றிக்ஸ்கல்லூரியில் தஞ்சமடைந்திருந்த அகதிகளில் சிலர் பீதிகாரணமாக அங்கிருந்து வெளியேறிவருகின்றனர்.

ஷெல் தாக்குதல்கள் விமானக்குண்டுவீச்சு என்பன அகதிகள் தங்கியுள்ள பற்றிக்ஸ் கல்லூரிக்குச் சமீபமாக இடம் பெற்றுவருவதே இதற்குக் காரணம் ஆகும். (இ-51)

### தி. மு. கவின் உதவியுடன்

# பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு புலிகள் ஆயுதங்களை வழங்குகிறார்களா?

### ராஜீவின் குற்றச்சாட்டை மறுக்கிறார் கருணாநிதி

சென்னை, ஜூலை 25

விடுதலைப் புலிகள் பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு தி மு. கவின் உதவியுடன் ஆயுதங்களை வழங்கி வருவதாக ராஜீவ் காந்தி சுமத்திய குற்றச்சாட்டை தமிழக முதலமைச்சர் கருணாநிதி நேற்று மறுத்தார்.

இது பற்றி செய்தியாளர்களிடம் முதலமைச்சர் கருணாநிதி மேலும் சொன்னதாவது;

இலங்கை இராணுவத்தை எதிர்த்துப் போரிட விடுதலைப் புலிகளுக்கே ஆயுதங்கள் தேவைப்படும் இந்த நிலையில், அவர்கள் தங்கள் ஆயுதங்களை பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு வழங்குகின்றார்கள் என்று முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கூறுவதில் சிறிதும் அர்த்தமே இல்லை. தமிழ்ப்போராளிகளினாலோ அல்லது வேறு வகுப்புவாத சக்திகளாலோ தமிழகத்தில் வன்முறை தோன்றக் கூடாது என்பதில் மாநில அரசு மிகுந்த அக்கறையாக இருந்து வருகிறது என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார். (உ-எ)

### சமாதானம் வேண்டி தீ மிதிப்பு

கானமா முனியப்பர் ஆலய வருடாந்த தீக்குளிர்ச்சிப் பொங்கல் ஆராதனை, தீ மிதிப்பு என்பன எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறும்.

நாட்டில் அமைதி, ஐக்கியம், மாதானம் எசன்பன வேண்டியும், இலங்கை இராணுவத்தின் கொலை, வன் செயல்களுக்கு முற்றுப் புள்ளி வேண்டியும் தீக்குளிப்பு நடைபெறும். (இ-75)

## மக்களை கண்டபடி சுடுவதை நிறுத்த அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 25

தேடுதல் வேட்டை என்ற பெயரில் தமிழ் மக்களை கண்டபடி சுடுவதை படையினர் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு ஆறு தமிழ் அமைப்புகள் சேர்ந்து நேற்றுக் கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ், ஈ. பி. டி. பி, புளொட் ஆகிய அமைப்புகள்வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தம் குறித்தும், அங்கு தமிழ் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்து இரண்டு நாட்களாகக் கூடி ஆராய்ந்தனர்.

அதன் பின்னர் அவை கூட்டாக விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

★ மக்கள் வாழும் பகுதிகளில் தேடுதல் வேட்டையின் போது கண்டபடி படையினர் சுடுவது நிறுத்தப்பட வேண்டும்.

★ கைது செய்யப்பட்ட அனைவரது பெயர்களும் அடங்கிய பட்டியலை அரசு வெளியிட வேண்டும்.

★ சிறைகளில்அவர்களை, அவர்களது உறவினர்கள் சந்திக்க வழி செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (அ-எ)

### ஸ்ரீலங்கா கடற்படையின் தாக்குதலிலிருந்து

## இந்திய மீனவர்களை பாதுகாக்க நடவடிக்கை

சென்னை, ஜூலை 25

ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதல்களில் இருந்து இந்திய மீனவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியக்கரையோரக்காவற்படை டைரக்டர் ஜெனரல் நேற்று தமிழக முதலமைச்சர் திரு.கருணாநிதியைச்சந்தித்து இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தச் சந்திப்புக் குறித்து முதலமைச்சர் கருணாநிதி நேற்று செய்தியாளர்களிடம் தகவல் வெளியிடுகையில்-

இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையே ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட- கச்சதீவு சம்பந்தமான உடன்பாட்டின்படி - கச்சதீவுக் கடலில் மீன்பிடிக்கும் உரிமை இந்திய மீனவருக்கு உண்டு என்று டைரக்டர் ஜெனரல் தெரிவித்தார் என்றார்,

இதேவேளை-

இலங்கை கடற்படையினரின் நடவடிக்கைகள் காரணமாக இராமேஸ்வரம் பகுதி மீனவர்களின்தொழில் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அங்குள்ள சுமார் ஆயிரத்து ஐநூறு இயந்திரப்படகுகளில் ஒரு சில படகுகளே தற்போது கடலில் மீன்பிடிக்கச் செல்வதாகவும் இந்தியச் செய்திகள் தெரிவித்தன, (உ-எ)

## கைதான இளைஞர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 25

கடந்த 17 ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மதுரை மகேந்திரன் (வயது 22) என்பவர் செட்டிகுளம் பகுதியில் உள்ள பொதுக்கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களினால் இந்த சடலம் மீட்கப்பட்டது. (உ-9)

## திருமலை ஊழியர் வேலைக்கு செல்லமுடியாத நிலைமை

யாழ்ப்பாணம், ஜூலை 25

போக்குவரத்து சீரின்மையால் வேலைக்கு சமுகமளிக்க முடியாதுள்ளதாக திருகோணமலை அரச ஊழியர்கள் வடக்கு—கிழக்கு மாகாண ஆளுநர், அரச அதிபர் ஆகியோருக்கு அறிவித்துள்ளனர்.

திருகோணமலை அலுவலகங்களில் கடமையாற்றும் சகல அரச ஊழியர்களையும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி வேலைக்கு சமுகமளிக்குமாறு அரசு அறிவித்துள்ளது.

போக்குவரத்து சீர்கேடு, பாதுகாப்பின்மை ஆகிய காரணங்களால் வேலைக்குச் செல்ல முடியாதுள்ளதாகவும், போக்குவரத்து வசதி செய்து தந்தால் வேலைக்கு வரமுடியும் என்றும் கூறும் கடிதத்தை 92 அரச ஊழியர்கள் கையொப்பம் இட்டு யாழ்—அரச அதிபரிடம் நேற்றுச் சமர்ப்பித்தனர்.

திருமலையில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 400 அரச ஊழியர்கள் இங்கு உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்]

(இ-3)

### நல்லூர் உற்சவகால ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நல்லூர் உற்சவத்தின்போது மக்கள் கூடி நின்று பொழுது போக்கும் அம்சங்களுக்கு தடைவிதிக்கப்பட இருக்கிறது.

இதன்படி ஐஸ்கிறீம் கடைகள், அலங்காரப் பொருள்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் என்பன விற்கும் கடைகள் மற்றும் மக்கள் கூட்டமாக நிற்பது போன்றவை தடை செய்யப்பட உள்ளது.

நல்லூர் உற்சவ ஏற்பாடுகள் தொடர்பாக நேற்று யாழ். மாநகர சபை அலுவலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

உற்சவ நாட்களில் நல்லூர் ஆலய முன்றலூடாக போக்குவரத்துக்களைத் தடை செய்து, கச்சேரி-நல்லூர் வீதி, நாவலர் வீதியூடாக நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. [ஓ-9]

## சுழற்சிமுறை மின்சார விநியோகம் சீராகும்!

யாழ்ப்பாணம், ஜூலை 25

கடந்த வார இறுதியில் பழுதடைந்த சுன்னாகம் உபமின் உற்பத்தி நிலையத்தின் ஜெனரேட்டர்களை திருத்தும் நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஜெனரேட்டர்கள் இரண்டொரு நாட்களில் திருத்தப்பட்டு விடும் என்றும்—

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள பகுதிகளுக்கு சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கும் திட்டம் சீராகச் செயற்படுத்தப்படும் என்றும் மின்சார சபை அதிகாரி ஒருவர் நம்பிக்கை வெளியிட்டார். [உ-10]

### எம். பிக்கள் ராஜினாமா

கொழும்பு, ஜூலை 25

ஈரோஸ் எம்.பிக்கள் அனைவரும் திங்களன்று நாடாளுமன்றத்தில் இருந்து இராஜினாமாச் செய்தனர்.

இது சம்பந்தமாக நேற்று முன்தினம் கொழும்பில் ஈரோஸ் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. [அ-எ]

## போதனா வைத்திய சாலை பொருள்கள் மானிப்பாய்க்கு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சிறிது சிறிதாக மானிப்பாய்க்கு நகர்ந்து கொண்டிருக்கிறது.

யாழ். போதனா வைத்திய சாலையை மீண்டும் திறப்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சி கைகூடாமல் போனதை அடுத்தே இந்த நிலைமை உருவாகி இருக்கிறது.

தற்காலிகமாக மானிப்பாயில் இயங்கும் போதனா வைத்தியசாலைக்கு தேவையான சகல தளபாடங்களும், மெத்தைகளும், மருந்து வகைகளும் யாழ். ஆஸ்பத்திரியில் இருந்து தினமும் கொண்டு செல்லப்படுகின்றன. (இ-10)

### ஹெலித் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 25

நேற்று முன்தினம் அச்சுவேலிப் பகுதியில் ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பொன்னர் கிருஷ்ணபிள்ளை என்பவர் காயமுற்றார்.

அப்பகுதியில் நின்ற லொறி ஒன்று பலத்த சேதமுற்றது.

## பரந்தனை கைப்பற்றியதாக இராணுவத்தினர் தகவல்

கொழும்பு, ஜூலை 25

பரந்தன் பட்டினத்தை இலங்கை ஆயுதப்படையினர் கைப்பற்றி விட்டனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கான சண்டையில் 5 ஆயுதப்படையினர் உயிரிழந்தனர் என்றும் 15 படையினர் காயமடைந்தனர் என்றும் [illegible] [இ-எ]

### பொருள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெட்டி, பால்மா வகைகளும் வருகின்றன.

அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட், உணவுத் திணைக்கள அதிகாரி திரு. கே. நடேசபிள்ளை ஆகியோர் பருத்தித்துறையில் ஏற்பாடுகளைத் கவனித்தனர். (இ-10-3)

### பரந்தனில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முதல் பிற்பகல் மூன்று மணி வரை உக்கிர மோதல் இடம் பெற்றதாகவும் —

அப்போது பொம்மர், அவ்ரோ ஆகியவற்றிலிருந்து விமானக் குண்டு வீச்சும், ஹெலிக்கொப்டரிலிருந்துதாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாகவும் —

இந்த மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் மன்னாரைச் சேர்ந்த சீலன் என்ற போராளி உயிரிழந்ததாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-9)

### வவுனியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் எவரும் சமுகம் அளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, வவுனியா நகரிலுள்ள தமிழர்களின் வீடுகளிலும், கடைகளிலும் இருந்து அவர்கள் தமது பொருள்களை எடுத்துச் செல்ல இப்பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான விசேட "பாஸ்" விநியோகிக்கப்பட்டுள்ளது. (ஓ-3-5)

### திருமலை- ஹபர...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முற்றதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

காத்தான்குடியில் இடம் பெற்ற மற்றொரு சம்பவத்தில் ஒரு சிப்பாய் உயிரிழந்ததாகவும் மூவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

### துன்னாலையில் ஹெலி வேட்டு

பருத்தித்துறை, ஜூலை 25

துன்னாலைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை ஹெலி ஒன்று வீதியில் சென்ற வாகனங்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தது.

இதனால் அப்பகுதியில் சில வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன. (ஓ-118)

### புதுக்குடியிருப்பு: சர்வோதயம் உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 25

புதுக்குடியிருப்பு பகுதிஅகதிகளுக்கு அவசர உதவியாக உணவுப் பொருள்களையும், மருந்து வகைகளையும் சர்வோதயம் நேற்று அனுப்பி வைத்தது. அங்கு 17 அகதி முகாம்கள் உள்ளன, (இ-3)

### திருமலையிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருக்கும் பிரஜைகள் — அங்கிருந்து வேறு வாகன அணிமூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுவர். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org